[28th April 1959

Provision of pump sets for Harijans

*213 Q.—SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

ஆற்றுக்கால்—வாய்க்கால் பாசனமுள்ள பிரதேசங்களில் கிணறு வெட்டும் திட்டத்திற்குப் பதிலாக அப் பிரதேச ஹரிஜன மக்களுக்கு தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் (Pump sets) வாங்கிக் கொடுக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

SRI M. C. MUTHUKUMARASWAMY : ஹரிஜனங்களுக்கு காளை மாடுகள் வாங்கிக் கொடுப்பது, வீடு கட்டிக்கொடுப்பது, கிணறு வெட்டிக் கொடுப்பது போன்று பம்ப் செட் வாங்கிக் கொடுப்பதில் என்ன சிரமம் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ? இனியாவது அதற்கு வசதி செய்து கொடுக்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : மாடுகள் வாங்கிக் கொடுப்பது, வீடுகள் கட்டிக் கொடுப்பது, கிணறுகள் வெட்டிக் கொடுப்பது ஆகியவற்றுக்கே பணம் அதிகமாக வேண்டியிருக்கிறது. அதற்கே போதுமான பணம் இல்லாதபோது பம்ப் செட்டுகள் எவ்வாறு வாங்கிக் கொடுப்பது ? நிதி நிலைமை சரிப்படும் வரையில் இதெல்லாம் செய்யமுடியாது.

Missing of bags of chemical fertilizers in the Government Depot at Tindivanam

* 214 Q.—SRI T. S. RAMASWAMY PILLAI (on behalf of SRI S. M. ANNAMALAI) :—கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு 1958–59-ல் எத்தனை மூட்டை இரசாயன உரம் ஒதுக்கப்பட்டது ?

(ஆ) சர்க்காருக்குச் சொந்தமான இரசாயன உர மூட்டைகள் திண்டிவனம் பிராஞ்சில் காணமல் போய்விட்டதென்று புகார்கள் ஏதேனும் வந்ததா ? எவ்வளவு மூட்டைகள் காணமல் போயின ?

(இ) இந்த மூட்டைகள் எப்போது இரயில்வே வேகன்களிலிருந்து இறக்கப்பட்டு திண்டிவனம் ஏஜெண்டால் எடுத்துக்கொள்ளப்பட்டது ?

(ஈ) புகார்கள் வந்திருந்தால், அதன்மீது சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The following quantities of the chemical fertilizers were allotted to the Government stockholders, the South Arcot District Co-operative Supply and Marketing Society, during 1958–59 :

Ammonium Sulphate	3,582 tons.
Urea	725 tons.
Ammonium Sulphate Nitrate	300 tons.

(*b*) Yes, Sir. Four hundred and six bags of Ammonium Sul-panchayats during 1958–59 is 42,639 tons.

28th April 1959]

(*c*) The consignment of these bags was taken delivery of by the Branch Manager on 17th December 1958.

(*d*) The Government stockholder has filed a complaint with the Sub-Inspector of Police, Tindivanam, against the Branch Manager of the Society for criminal breach of trust. The Police are investigating.

Conference of Ministers for Agriculture

* 215 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) சமீபத்தில் விவசாய மந்திரிகள் மகாநாடு டெல்லியில் நடந்ததா?

(ஆ) நம் மாநிலத்தில் அம் மகாநாடு முடிவு ஏதேனும் அமுலுக்குக் கொண்டு வரவேண்டிய விஷயம் முடிவு செய்யப்பட்டதா ?

(இ) அதன் விவரமென்ன ?

(ஈ) அதன் பேரில் அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கை என்ன ?

(உ) இத்திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசாங்க உதவியென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The answer is in the affirmative.

(*b*) No, Sir. The summary record of the Conference communicated by the Government of India is under consideration of this Government.

(*c*) & (*d*) Do not arise.

SRI A. VEDARATHNAM : இந்த மகாநாட்டில் தென் உணவு மண்டலம் சம்பந்தப்பட்ட மட்டிலும் அது சரிவர நடைபெறவில்லை. ஆந்திரர்கள் அவர்கள் குறிப்பிடும் விலைக்குத் தானியம் கொடுக்க மறுக்கிறார்கள். கேரளம் குறிப்பிட்ட விலையைக் காட்டிலும் அதிகமாக விலை கொடுத்து வாங்குகிறார்கள். இந்த மகாநாட்டில் அந்த தென் மண்டலத்திலிருந்து துண்டித்துக்கொள்ளுவதுபற்றி அமைச்சர் அவர்கள் வற்புறுத்தினார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த விவசாய அமைச்சர் அவர்கள் மாநாட்டில் உணவு விஷயம் விவாதிக்கப்படவில்லை. முன்பு மத்திய அரசாங்கம் விவசாய இலாகாவை எவ்வாறு திருத்தியமைப்பது என்பதைப் பரிசீலிப்பதற்காக ஒரு கமிட்டி போட்டு அந்தக் கமிட்டி ராஜ்யங்கள் எல்லாம் சுற்றி சில சிபார்சுகளைச் செய்தார்கள். அவை பற்றித்தான் இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. அநேக சிபாரிசுகள் முன்னேற நம்முடைய அரசாங்கத்தில் நடைமுறையில் ஏற்பட்டிருக்கிறது.

'Launching of the Kharif Production Drive, launching of a Mass Rat Eradication Campaign and measures for increasing oilseeds production. இதுதான் இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.